**செய்தி வெளியீடு எண்.987** **நாள்14.11.,2008**

# செய்தி வெளியீடு

தமிழக அரசின், வணிக வரித் துறையில், தினக்கூலி அடிப்படையில் குற்றேவலர்களாக (Casual Labourers), சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிவந்த தற்காலிகப் பணியாளர்களின் பணி இதுநாள் வரை பணி வரன்முறை செய்யப்படாமல் இருந்து வந்தது.

அவர்களது பணியினை வரன்முறை செய்து வழங்கிட நீண்ட காலமாக அரசிடம் கோரிக்கை வைத்திருந்தனர். அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை தற்போதைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்து, 01.01.2006 அன்று 10 ஆண்டுகள் பணிமுடித்த 43 தற்காலிக பணியாளர்களின் பணியினை தேவையான விதித் தளர்வு செய்து, பணி நிரந்தரம் செய்து ஆணையிட்டுள்ளது. இதனால், இது வரை தினக்கூலியை மட்டுமே பெற்று வந்த இவர்கள், இனிவரும் காலங்களில், அரசு ஊழியர்களுக்கான காலநிலை ஊதியம், ஆண்டு ஊதிய உயர்வுகள், மற்றும் விதிகளின்படி இதர பயன்களும் பெறுவார்கள்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.